பொன்னியின் செல்வி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரையிலிருந்து குற்றாலம் செல்லும் நெடுஞ்சாலை, புளியங்குடி பகுதியில் மிகக் குறுகிய சாலையாக இருக்கிறது. அதன் காரணமாக விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்றன. எனவே, ஒன்று, அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டும். இல்லையென்றால், மேம்பாலம் கட்டித் தரவேண்டும். ஆகவே, ஏதேனும் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குற்றாலம் செல்கின்ற சாலை குறுகலாக இருக்கின்றது; அதை விரிவுபடுத்த வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பின், அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 288, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

288—

சொந்தக் கட்டடம்

*__6890—திரு. இரா. குமரகுரு:__

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டையிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உளுந்தூர்பேட்டை குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்கு நிலம் தேர்வு செய்து, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் ஒளிவிளக்காக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். எனது உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில் 135 அங்கன்வாடி மையங்களும், திருநாவலூர் ஒன்றியத்தில் 120 அங்கன்வாடி மையங்களும், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்தில் 114 அங்கன்வாடி மையங்களும் இயங்கி வருகின்றன. அந்த அங்கன்வாடி மையங்களில் கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்ட அங்கன்வாடிப் பணியாளர்களும், உதவியாளர்களும் பணிபுரிந்து வருகின்றார்கள். வட்டாரத்திற்கு ஓர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் இருக்க வேண்டுமென்பது நடைமுறை. ஆனால், இந்த மூன்று ஒன்றியங்களிலுமே அந்த அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அந்த வாடகைக் கட்டடத்தில் பணியாளர்களுக்குப் போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால், அங்கே பணிபுரிகின்ற பணியாளர்களும், உதவியாளர்களும் அந்த அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்துக்கொண்டே இருக்கின்றார்கள். ஆகவே, நடப்பு நிதியாண்டிலேயே, அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற அந்த அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு, அங்கே இடத்தைத் தேர்வு செய்து, உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திலே ஒரு கட்டடமும், திருநாவலூர் ஒன்றியத்திலே ஒரு கட்டடமும், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திலே ஒரு கட்டடமும் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

[2014 ஜூலை 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் என்பது முழுக்க முழுக்க மைய அரசின் திட்டம். இந்த மைய அரசின் திட்டத்திலே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கு வட்டார அளவிலே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு எந்த நிதியும் ஒதுக்கப்படுவதில்லை. இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அங்கன்வாடி குழந்தைகளின்மீது அன்பு வைத்து, மனித நேயத்தோடு, எங்கெல்லாம் சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றதோ, அங்கெல்லாம் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ, இந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொள்வதற்கு எந்தவிதமான வழிவகைகளும் செய்யப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவருடைய விருப்புரிமை அதிகாரத்தின் அடிப்படையில் இந்தக் கட்டடங்களைக் கட்டிக்கொள்ள முடியும். ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய திருநாவலூர், உளுந்தூர்பேட்டை ஆகிய இரண்டு வட்டாரங்களிலேயும், அந்த அலுவலகங்கள் இப்போது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. இந்த வாடகைக் கட்டடங்களுக்கான வாடகையை மாதத்திற்கு ரூ.5,500/- வழங்க வேண்டுமென்று மைய அரசு உத்தரவிட்டு, நிதி வழங்கப்படுகிறது. அதிலே 75% மைய அரசின் பங்கு; மாநில அரசின் பங்கு 25%. இதனடிப்படையிலேதான் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை அதிகாரத்திலே அந்த இரண்டு வட்டாரங்களிலேயும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

2014 ஜூலை 31]

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட நிருவாகத்திடம் எடுத்துச்சொல்லி, உளுந்தூர்பேட்டை மற்றும் திருநாவலூர் ஒன்றியங்களிலே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களைக் கட்டிக் கொடுப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி வழங்கியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திலே 48 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும், திருநாவலூர் ஒன்றியத்திலே 29 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திலே 12 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. இவை அனைத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமான கேள்விக்கு நேற்றுகூட பதிலளித்தேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15,313 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் புதியதாகக் கட்டிக்கொள்வதற்கு உத்தரவிட்டதன் அடிப்படையில், பழுதடைந்த கட்டடங்கள், மிகவும் மோசமான நிலையிலுள்ள கட்டடங்கள், வாடகைக் கட்டடங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து, அவற்றுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் உடனடியாகக் கட்டப்படவேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கும் அங்கன்வாடி மையக் கட்டடங்களை ஆய்வு செய்து, புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர், ரிஷிவந்தியம், திருவெண்ணெய்நல்லூர் வட்டாரங்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விடிய, விடிய கதை கேட்டு, சீதைக்கு இராமன் சித்தப்பா' என்று சொன்ன கதையைப்போல, இப்பொழுதுதான் இதுகுறித்து விரிவான பதிலைச் சொன்னேன். இந்தத் திட்டம் முழுக்க, முழுக்க மத்திய அரசின் திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் கட்டடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்தால் எந்த நிதியும் ஒதுக்கப்படுவதில்லை. ஆகவே, இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை அதிகாரத்தின் அடிப்படையில்தான் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த வட்டாரத்தில் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துருவைப் பெற்று, நடவடிக்கை எடுப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 289, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

289—

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

*__30076__—**திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—